யாரோ தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் தொழில் ஆரம்பிக்க பயப்படுகிறார்கள் என்று ரகசியமாக அங்கத்தினருக்கு தகவல் அனுப்பி இருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரையில் இந்திய நாட்டிலே எங்கே சென்றாலும், இப்போது தொழில் ஆரம்பிப்பதற்கு இடம் வேண்டுமானால் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சி செய்யும் தமிழ்நாட்டுக்கு செல்லுங்கள் என்று சொல்கிற நிலை இருக்கிறது. நண்பர் வினயகம் மட்டும் இப்படிச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

* 175 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காகிதத் தொழிற்சாலை ஏதேனும் அமைக்கும் உத்தேசம் தற்போது தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் படுகையில் ஏராளமான மூங்கில், வைக்கோல் புல் முதலியவைகள் கிடைப்பதால் இனிமேலாகிலும் அந்தப் பகுதியில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமக்கு இருக்கும் காகித பற்றாக்குறையைப் போக்குவதற்கு புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவேண்டும் என்றும், நம்முடைய தமிழ்நாட்டில் ஒன்று கூடுதலாக தொடங்கவேண்டும் என்றும், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய காகிதத் தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தாக வேண்டும் என்றும் நம்முடைய மத்திய அரசு ஆலோசனை கூறியிருக்கிறது. அதற்காக ஒரு குழு அமைத்து என்ன மூலப் பொருள்கள் நம்முடைய நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்து புதிய காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் என்ற ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டு வருகிறது. அது விரைவிலே முடிவாகும் என்று கருதுகிறேன்.

* 176 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether a barrel and drum fabrication unit is to be set up to assist the Madras Refineries by the State Government ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த பீப்பாய்களை, தொட்டிகளை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையைப் பொறுத்த அளவில் மாநில அரசு ஆரம்பிக்காவிட்டாலும் சரி, தனியாருக்கு அம்மாதிரி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு உரிமம் வழங்கப்படுமா ? மத்திய அரசாங்கம் அதை ஆரம்பிக்க இருக்கிறார்களா ? மாநில அரசு வேறு ஏதாவது உப தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.